109--

சத்தியமங்கலம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

***22162–திருமதி அ. தி. சரஸ்வதி:**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

சத்தியமங்கலம் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத்தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தியமங்கலம் தொகுதியில் குறைந்த அளவில் 10 தொழில் முனைவோர் தகுந்த திட்டக் குறிப்புடன் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியை நாடினால் அப்பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி பகுதியில், மற்ற பகுதிகளில் இருந்து உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளைக் கர்நாடக மாநிலத்திற்கு விற்பனை செய்ய விவசாய மக்கள் செல்கிறார்கள். விவசாய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் ஒப்பற்ற தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தாளவாடி விவசாய மக்களின் நலன் கருதி, தாளவாடிப் பகுதியிலே பட்டு விற்பனைக் கூடம் அமைக்கவும், கர்நாடக அரசு பட்டுக்கூடுகளுக்கு நிர்ணயிக்கும் விலையை நமது அரசும் விவசாய மக்களின் வாழ்வு மலர, பட்டுக்கூடுகளின் விலையை உயர்த்தவும், அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.,

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இப்போது கேட்கின்ற கேள்விக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இருப்பினும் அவர்களுடைய கோரிக்கை கருணையோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 110, திரு. கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

110--

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்ட சாலைகளுக்கு தனிப் பெயர் சூட்டுதல்:

***24307–திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--